02.02.2026 பி.வா.சா.2 சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 196 /2019 )
திரு.காசிராஜன்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) எனது அக்காவை கந்தசாமி நாயக்கரின் அண்ணன் திருமணம் செய்து கொடுத்துள்ளோம் எனதுஅக்காவின் கணவர் பெயர் என்னவென்றால் நாராயணசாமி நாயக்கர். கந்தசாமி நாயக்கருக்கும்,நாராயணசாமி நாயக்கருக்கும் சொந்த ஊர் எது என்றால் கே.ஆலங்குளம், கழுகுமலை. கந்தசாமி நாயக்கர் தாவாச்சொத்தை நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வந்தாக முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ளதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. 30.10.2019 ஆம் ஆண்டு கோட்டாட்சியர் போட்ட உத்தரவின் பேரில் கந்தசாமி பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பு கந்தசாமி பெயரில் பட்டா இருந்ததாகவோ, சாகுபடி அடங்கல் இருந்ததாகவோ, தீர்வை செலுத்தியதாகவோ எந்த விதமான பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் பிரதிவாதி தரப்பில் என்ன ஆவணம் கொடுக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அ.வ.எண்.146/2014 வழக்கில் எந்த நீதிமன்றத்தில் யார் யாருக்கு இடையே நடைபெற்றது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவாச்சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் 1969 முதல் 2019 வரை இடைப்பட்ட காலத்தில் கந்தசாமி நாயக்கர் தாவாச்சொத்தை அனுபவித்து வரவில்லை அதற்கு எந்தவித வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் இந்த வழக்கின் வாதியின் முன்பாத்திஸ்தரான திருமதி.ஜெயலலிதா அக்கா,தங்கை எனது அக்காவின் கணவர் நாராயணசாமி நாயக்கர் மற்றும் கந்தசாமிநாயக்கர்ஆகியோர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை வழக்குதாக்கல் செய்து அது நிலுவையில் இருந்ததால அதற்குஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை பொறுத்து 1,2 பிரதிவாதிகளின் தந்தை கந்தசாமி நாயக்கர், முன்பாத்தியஸ்தரான லெட்சுமியம்மாளுன் ஒரு வாய்மொழி ஒப்பந்தம் செய்திருந்தார் என்றும், லெட்சுமியம்மாளை,கந்தசாமி நாயக்கரின் அண்ணனுக்கு திருமணம் செய்துகொடுக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான். அதனால் அண்ணன் மனைவியும்,கந்தசாமி நாயக்கரும் ஒரு வாய்மொழி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்றால் தெரியாது. லெட்சுமியம்மாளுக்கு கனகம்மாள் என்ற ஒரு வாரிசு உண்டு என்றால் சரிதான்.

2) கனகம்மாளுக்கு 3 பெண் குழந்தைகள் உண்டு என்றால் சரிதான்.வாய்மொழி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாவாச்சொத்து லெட்சுமியம்மாளின் அனுபவத்தில் தொடர்ந்து இருந்து வந்தது என்றும் லெட்சுமியம்மாள் பெயரில் பட்டா இருந்து வந்தது என்றால் சரியல்ல. லெட்சுமியம்மாள் இறப்புக்கு பின்னர் அவரது மகளான கனகம்மாள் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டு 24.11.2003ல் கழுகுமலை சப்ரி நக்கொடை ஆவண எண்.1308/2003 மூலம் ஜெயலலிதா என்ற மகளுக்கு நன்கொடையாக கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயலலிதா பெயரில் பட்டா எண்.902 எண்ணில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் தவறாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஜெயலலிதா தான் இந்த வாதிக்கு ஆவணங்கள் ரீதியாக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு எந்த எந்ததேதிகளில் வழக்கு பட்டியலில் இடப்படுகிறதோ அந்த அந்த தேதிகளில் முன்னிலைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். கோட்டாட்சியர் விசாரணை தேதிகளிலும் நான் கோட்டாட்சியர் அலுவலகத்தில் முன்னிலையாகியுள்ளேன் என்றால்சரிதான். நான் வில்லங்கப்பேர்வழி என்றும் எங்கு எங்கு சிவில் தாவா உள்ளதோ அந்த பகுதியில் ஒருதரப்பினராக செயல்படுவேன் என்று வாதி கூறுகிறார் என்றால் அது கற்பனை தவறானதாகும். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை இந்த வழக்கிற்கு தொடர்பில்லாதவை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
02.01.2026.